# ஜாலான் மஸ்ஜிட் இந்தியா

# பாதுகாப்பானதே

கோலாலம்பூர், அக். 15-

தலைநகரிலுள்ள ஜாலான் மஸ்ஜிட் இந்தியா அனைத்து நடவடிக்கைகளுக்கும் மிகவும் பாதுகாப்பானது என பிரதமர்துறை அமைச்சர் (கூட்டரசுப் பிரதேசம்) டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

## அமைச்சர் ஸலிஹா உறுதி



கனிம-புவி அறிவியல் இலாகா, மலேசிய பொறியியலாளர் கழகம், மலேசியன் புவி ஆய்வியல் துறை போன்ற நிபுணத்துவ தொழில் துறையினர் மேற்கொண்ட ஆய்வின் வழி இது நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.

பக்கம் 13




கோப்புப்படம்

## முதல் பக்கத் தொடர்ச்சி

### ஜாலான் மஸ்ஜிட் இந்தியா ...

அப்பகுதியில் நிகழ்ந்த மண் உள்வாங்கிய சம்பவம் தொடர்பான முழு அறிக்கை அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் சொன்னார்.

இது தொடர்பான விசாரணை அறிக்கை உட்பட அதன் சுற்றியுள்ள பகுதியின் புவி தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையும் இப்போது போலீஸ், கோலாலம்பூர் மாநகர் மன்றம் உட்பட பல்வேறு அமைப்புகளின் ஆய்வுகளின் இறுதிக் கட்டத்தில் உள்ளதாக அவர் சொன்னார்.

இவ்விரண்டு அறிக்கைகளையும் பொதுமக்களுக்கு வெளியிடுவது குறித்து எந்தவொரு முடிவும் எடுப்பதற்கு முன் அது முன்னதாக அமைச்சரவையில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றார்.

விசாரணைகளில் வெளிப்படைத்தன்மைக்கு அரசாங்கம் எப்போதும் உறுதி கொண்டுள்ளது. குறிப்பாக இவை அனைத்தும் பொதுப் பாதுகாப்பு சம்பந்தப்பட்டவை. எனவே, ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நிகழ்ந்த மண் உள்வாங்கிய சம்பவம் மீதான விசாரணை மேற்குறிப்பிட்ட தரப்பினரிடம் இறுதிக் கட்டத்தில் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

கோலாலம்பூரின் மத்திய வாணிகப் பகுதி உட்பட இடர் பகுதிகளில் மண்ணின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கான ஜிபிஆர், மைக்ரோ கிராவிட்டி டெஸ்டிங் போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் புவி தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஏற்படும் மண் உள்வாங்கும் பிரச்சினைகளுக்கு ஆளாகக்கூடிய பகுதிகளும் இதில் அடங்கும் எனவும் அவர் சொன்னார்.

நேற்று மக்களவையில் கேள்வி - பதில் நேரத்தின்போது பத்து உறுப்பினர் (பக்காத்தான் ஹராப்பான்) பி. பிரபாகரனின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கிய சம்பவம் தொடர்பான விசாரணையின் முழு முடிவுகளை பொதுமக்களுக்கு அரசாங்கம் வெளியிடுமா எனவும் பிரபாகரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

கடந்த 23.8.2024ஆம் தேதி இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தின் குப்பத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி என்ற பெண், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் 8 மீட்டர் ஆழமான குழியில் விழுந்து காணாமல் போனார்.

சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு அண்மைய பாதுகாப்பு நிலை குறித்து பதிலளித்த அமைச்சர், கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிப் தலைமையிலான சிறப்புப் படை நடத்திய ஆய்வின் அடிப்படையில், ஜாலான் மஸ்ஜிட் இந்தியா அனைத்துவகையான செயல்பாடுகளுக்கும் பாதுகாப்பானது என இப்போது உறுதி செய்யப் பட்டுள்ளது என்றார்.

போலீஸ், தீயணைப்பு - மீட்புப் படை, பொதுப்பணி இலாகா, கனிம - புவி அறிவியல் இலாகா, மலேசிய பொறியியலாளர் கழகம், மலேசியன் புவி ஆய்வியல் துறை போன்ற தொழில்முறை அமைப்புகளின் நிபுணத்துவத்தின் கூட்டுக் கருத்துகளும் இதில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சொன்னார்.